செய்தி வெளியீடு எண் : 1744 நாள் : 24.08.2023

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 5 இலட்சம் குடியிருப்புகள் /தனி வீடுகள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் சிலி குடியரசு நாட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் 23.8.2023 முதல் 25.8.2023 வரை தென் அமெரிக்காவில் உள்ள சிலி குடியரசு நாட்டிற்கு மூன்று நாட்கள் அரசு முறை பயணமாக சென்றுள்ளார். முதல் நாளான (23.8.2023) அன்று சிலி குடியரசு நாட்டின் மாண்புமிகு அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் சான்ட்டியாகோ மாநகரில் நடைபெற்றது.

மாண்புமிகு சிலி குடியரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர திட்டமிடல் அமைச்சர் திரு. கார்லோஸ் மான்டெஸ் சிஸ்டர்னாஸ் அவர்கள் ( Mr. Carlos Montes Cisternas, Hon'ble Minister for Housing and Urban Planning ) பேசுகையில் சிலி குடியரசு, இந்தியாவை போலவே வளர்ந்து வரும் நாடு. எங்கள் நாட்டில் கடந்த 50 ஆண்டு காலமாக பின்பற்றப்படும் வீட்டு வசதி கொள்கைகள், குடிசைகளை மேம்படுத்தும் திட்டங்கள், உள்கட்டமைப்பு மேம்பாடுகள், வறுமைக் குறைப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை சிறப்பான முறையில் கையாண்டு வருகின்றோம். எங்களின் கடந்த காலம் மற்றும் தற்போதைய வீட்டு வசதி கொள்கைகள், உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், வங்கிகளின் செயல்பாடுகள், பயனாளிகளின் பங்களிப்புகள், கட்டுமான தொழிலில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து இந்த மூன்று நாள் பயணத்தில் விரிவாக எடுத்துரைக்கப்படும் என தெரிவித்தார்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில், "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற உயர்ந்த நோக்கில் தொடங்கப்பட்டது. இந்த வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல குடிசைகளில் வாழும் மக்களுடைய

வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவின் பெரிய மாநிலங்களில் நகர்ப்புர மக்கள் தொகையின் பங்கின் அடிப்படையில் தமிழ்நாடு முதலிடத்திலும், முழுமையான நகர்ப்புற மக்கள் தொகையில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. நகர்ப்புர மக்கள்தொகை 2023 இல் 60 சதவீதத்தை எட்டும் மற்றும் 2031 இல் 67 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளாதாரம் மற்றும் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8% பங்களிக்கிறது. 2019–2020ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 265 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம் பல்வேறு வீட்டு மாதிரிகளை செயல்படுத்தி வருகிறது. தற்போது, கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் 400 சதுர அடி பரப்பளவில் பல்நோக்கு அறை, படுக்கையறை, சமையலறை, குளியல் அறை மற்றும் கழிப்பறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வாழ்விடங்களிலேயே உட்கட்டமைப்புகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல் , அடிப்படை மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளுடன் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம், பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டு வசதி வளாகங்கள் போன்ற வகைகளில் வீடுகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ஒரு குடியிருப்புக்கு ரூ.1.5 இலட்சம் மானியமாகவும், தமிழ்நாடு அரசு ரூ. 7.50 இலட்சத்திலிருந்து ரூ.13 இலட்சம் வரை மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள தொகை பயனாளிகளால் ஏற்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் ரூ.17 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 1,45,074 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12,500 கோடி மதிப்பீட்டில் 4,09,581 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி திட்டத்தின் கீழ் முன்னோடியாக 6 திட்டப்பகுதிகளில் 60,000– ற்கும் மேற்பட்ட படுக்கைகள், தங்கும் இடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 5 இலட்சம் குடியிருப்புகள் / தனி வீடுகள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கட்டப்பட்டு ஏழை எளிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுமார் 1.30 இலட்சம் குடும்பங்களுக்கு மனைகள் வழங்கப்பட்டுள்ளது" என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிலி குடியரசின் வீட்டு வசதி துறை சார்பு செயலாளர் திரு. கில்லர்மோ ரோலாண்டோ (**Guillermo Rolando** MINVU's Under Secretary), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் இ.ஆ.ப., மற்றும் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.மீ.தங்கவேல் இ.ஆ.ப.,, சிலி குடியரசின் உலக வங்கியின் பிரதிநிதி திரு. விர்ஜீனியா பிராண்டன் (Virginia Brandon ,Representative in Chile, World Bank ), உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திருமதி இசபெல் பிரெயின், (Isabel Brain, Senior Consultant, World Bank), உலக வங்கியின் மூத்த நகர்ப்புர நிபுணர் திருமதி யான் எஃப் ஜாங், (Yan F Zhang, Senior Urban Specialist, World Bank ) ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in